திருத்துவதால், திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் காலதாமதம் ஏற்படுகிறது. பல்வேறு சங்கடங்கள் வருகின்றன. ஆகவே அதை மாற்றி ஒரு திட்ட மதிப்பீட்டைக் கொடுத்த அந்த ஆண்டிலேயே அத்திட்டத்தை அமுல் படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : இந்தச் சாலையைப் பொறுத்த வரையில், கடந்த 1975 ஆம் ஆண்டிலே இத்திட்டம், அப்போது ஆட்சியிலிருந்த திராவிட முன்னேற்றக் கழக அரசால் போடப்பட்டது. அந்த ஆண்டிலேயே அந்தத் திட்டத்தை அவர்கள் செயல்படுத்தவில்லை. அதற்குப் பின்னால் ஆளுநர் ஆட்சிக் காலம் வந்தது. அவர்களுடைய காலத்திலும் இத்திட்டம் செயல்படுத்தப்படவில்லை. பின்னர் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு பொறுப்பேற்றதற்குப் பின்னாலே இந்தப் பணிகளைச் செய்து முடிக்க வேண்டுமென்ற குறியீட்டின் காரணமாக இதைத் தொடங்கியிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

திரு. ஆ. பாலசுப்ரமணியம் : "திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் தொடங்கப்பட்ட திட்டம் அவர்களுடைய காலத்திலும் முடியவில்லை, அதற்குப் பின்னால் வந்த அவசர கால ஆட்சியிலும் முடியவில்லை" என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலாவது இது முடியுமா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன். (சிரிப்பு)

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : கண்டிப்பாக முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

Hogenekal Hydro Electric Power Scheme

* 27 *Q.*—THIRU M. SANKARALINGAM and THIRU E. S. VENKATESAN : Will the Hon. the Minister for Agriculture and Irrigation be pleased to state—

(*a*) whether any step was taken to reach a separate agreement regarding Hogenekal Hydro Electric Power Scheme, without linking it with the Cauvery Water Distribution issue: and

(b) if so, the stage at which it now stands?

1978 செப்டம்பர் 2]

ஹொகேனகல் நீர்மின் விசைத் திட்டம்

திரு. எம். சங்கரலிங்கம் & திரு. ஈ. எஸ். வெங்கடேசன் : மாண்புமிகு வேளாண்மை நீர்ப் பாசனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) ஹொகேனகல் நீர் மின் விசைத் திட்டத்தை, காவிரி நதி நீர்ப் பங்கீட்டு பிரச்சினையோடு இணைக்காது, தனியே ஒப்பந்தம் செய்யும் முயற்சி ஏதும் மேற்கொள்ளப்பட்டதா ?

(இ) ஆமெனில், அது தற்போது எந்நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) ஆம்.

(இ) கருநாடக அரசோடு இது குறித்து பேச்சு வார்த்தை நடத்த தொடர்பு கொள்ளப்பட்டுள்ளது.

திரு. எம். சங்கரலிங்கம் : பேச்சு வார்த்தையில் காவிரி நீர்ப் பிரச்சினையோடு இணைக்காமல், இந்தப் பிரச்சினையைத் தீர்த்துக்கொள்வதற்கு கர்நாடக அரசும், நம் அரசும் ஒத்துக்கொண்டிருக்கிறதா? 23—5—1978 அன்று இது சம்பந்தமாக மாநில நீர்ப்பாசன அமைச்சர்கள் சந்தித்துப் பேசினார்கள் என்று சொல்லப்படுகிறதே, அதனுடைய முடிவு என்ன ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : ஹொகேனகல் நீர் மின் விசைத் திட்டம் சம்பந்தமாக கடந்த 23—5—1978 அன்று கேரளா, கர்நாடகம், தமிழகம் ஆகிய மாநிலங்களின் மின்சாரத் துறை அமைச்சர்களின் பேச்சு வார்த்தையின்போது, கர்நாடக மாநிலத்தைச் சேர்ந்த தகவல் துறை அமைச்சரும் அவருடைய மாநிலத்தைச் சேர்ந்த அதிகாரிகளும், இத்திட்டத்தை, காவிரி நீர்ப் பிரச்சினையோடு இணைக்காமல் தனியாக அதனுடைய தொழில் நுட்ப சாத்தியக்கூறுகளை ஆய்வு செய்வதற்கு இசைவு தந்துள்ளார்கள். அதன்படி தனியாகப் பேச்சு வார்த்தை நடத்தப்படும்.

திரு. ஈ. எஸ். வெங்கடேசன் : மேற்படி திட்டம் கைவிடப்படமாட்டாது என்ற உறுதிமொழியை அரசு கொடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : அப்படிப்பட்ட எந்த உறுதிமொழியையும் தற்போது கொடுக்க முடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

திரு. ஆ. பாலசுப்ரமணியம் : இத்திட்டத்திற்கு நமது மாநிலத்திற்கு ஆகக்கூடிய செலவு எவ்வளவாக இருக்குமென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : இது பற்றிய விவரங்கள் இல்லை. தனியாகக் கேள்வி கேட்டால், விவரமாகக் கொடுக்கிறேன்.

திரு. க. அறிவழகன் : இத்திட்டத்தின் கீழ் எவ்வளவு நீர்மின் விசை உற்பத்தியாகக் கூடும் என்பதைக் குறித்து அரசு செயற்குறிப்பை வைத்திருக்கிறதா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : காவிரிப் பள்ளத்தாக்கின் மின் திறனைப் பயன்படுத்தும் பொருட்டு, தர்மபுரி மாவட்டத்திலுள்ள ஹொகேனகல் என்னும் இடத்தில் ஒரு மின் திட்டத்தை உருவாக்கக்கூடிய வாய்ப்புகளை அரசு பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது. இதன் மூலமாக 800 மெகாவாட் மின் உற்பத்தி கிடைக்குமென்று நம்பப்படுகிறது.

Adulteration Offences.

* 28 Q.—THIRU ARCOT N. VEERASAMI (on behalf of THIRU V. THANGAPANDIAN) : Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) the number of persons who have been prosecuted for adulteration offences of foodstuffs from the year 1976 till 13th August 1977; and

(*b*) among them, the number of persons convicted ?

கலப்படக் குற்றங்கள்

திரு. ஆற்காடு நா. வீராசாமி (திரு. வே. தங்கப்பாண்டியன் சார்பில்) : மாண்புமிகு நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1976 ஆம் ஆண்டிலிருந்து 13—8—1977 ஆம் நாள் வரை, உணவுப் பொருள்கள் கலப்படக் குற்றங்களுக்காக எத்தனை பேர் மீது வழக்குத் தொடரப்பட்டுள்ளது ?

(இ) அவர்களில் எத்தனை பேருக்கு தண்டனை கிடைத்துள்ளது ?

மாண்புமிகு திரு. ஆர். சௌந்தரராஜன் : (அ) 10,522 பேர்கள் மீது வழக்கு தொடரப்பட்டது.

(இ) 8,935 நபர்களுக்குத் தண்டனை வழங்கப்பட்டது.